2022 மார்ச் 22]

36—

சிற்றுந்து வசதி

***7672—திரு. க. கணபதி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரவாயல் தொகுதி, 143–வது வார்டு, நொளம்பூர் பகுதியில் சிற்றுந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தற்போது மாநகர் போக்குவரத்துக் கழகம், சிற்றுந்து தடம் எண் S51–ல், இரண்டு சிற்றுந்துகள் தலா 24 பயண நடைகளுடன் நாளொன்றுக்கு மொத்தம் 48 பயண நடைகளை சென்னை புறநகர் பேருந்து நிலையத்திலிருந்து நொளம்பூர் சக்தி நகர் வரை பொதுமக்களின் பயன்பாட்டிற்கேற்ப இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், நொளம்பூர் பகுதிவாழ் பொதுமக்களின் நலன் கருதி சிற்றுந்து தடம் எண் S53–ல், மூன்று சிற்றுந்துகளை தலா 28 பயண நடைகளுடன் நாளொன்றுக்கு மொத்தம் 84 பயண நடைகளை அம்பத்தூர் தொழிற்பேட்டையிலிருந்து நொளம்பூர் வழியாக மதுரவாயல் ஏரிக்கரை வரை மாநகர் போக்குவரத்துக் கழகத்தால் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. ஆகவே, புதிய பேருந்துகள் இயக்க வேண்டிய அவசியம் இருக்காது. மேலும், தற்போதுதான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க ஒரு பேருந்து இயக்கப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கணபதி அவர்கள்.*

திரு. க. கணபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையின் வர்த்தக வளர்ச்சிக்கு உயிர்நாடியாகத் திகழக்கூடிய மதுரவாயல்–சென்னை துறைமுகம் உயர்மட்ட சாலைத் திட்டம், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆட்சிக் காலத்தில் கொண்டு வரப்பட்டது. கடந்த 10 ஆண்டு காலமாக*

கிடப்பில் போடப்பட்ட அந்தத் திட்டத்தை மீட்டெடுத்து நிறைவேற்றிட உறுதிபூண்டு, ரூ.5,770 கோடி மதிப்பீட்டில் 20.6 கிலோ மீட்டர் நீளமுள்ள இரட்டை அடுக்கு உயர்மட்டச் சாலையாக அமைக்க முடிவெடுத்துள்ளதாக நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதற்காக மதுரவாயல் தொகுதி மக்களின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரவாயல் தொகுதி, 143–வது வார்டு, நொளம்பூர் பகுதியில் சிற்றுந்து இயக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே தெரிவித்ததைப்போல 30–11–2021 அன்று முதல் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே சிற்றுந்து இயக்க கோரிக்கை விடுத்திருந்தார். அதற்கு முன்பே 2 பேருந்துகள் இயக்கப்பட்டிருந்தன. அதற்குப் பிறகு 3 பேருந்துகள் இயக்கப்பட்டன. ஆக, நிறைய நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. புதிய பேருந்துகளும் இயக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மீண்டும் மீண்டும் பேருந்துகளை இயக்குமாறு கேட்கிறார். அங்கிருக்கின்ற சூழ்நிலையைக் கருதி, மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் மேலாண்மை இயக்குநருடன் கலந்து பேசி ஆவன செய்யப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கணபதி அவர்கள், 'பேருந்து இயக்கப்படும்' என்று சொல்லிவிட்டார்கள். நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

திரு. க. கணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய அறிவிப்பிற்கு இதயமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், அய்யப்பன்தாங்கல் பணிமனையிலிருந்து புறப்பட்டு ஆற்காடு சாலை, சேக்குமானியம், மேட்டுக்குப்பம், வானகரம், ஓடமாநகர், மதுரவாயல் வழியாக கோயம்பேடு வரையான பேருந்து, பல ஆண்டுகளாக மக்கள் பயன்பாட்டில் இருந்தது. ஆனால், கடந்த காலத்தில் M28 என்ற எண்ணுள்ள ஒரு பேருந்து நிறுத்தப்பட்டுவிட்டது. அது மக்களுக்கு

2022 மார்ச் 22]

மிகவும் பயன்படக்கூடிய பேருந்து வழித்தடம். ஆகவே, நம்முடைய ஆட்சிக் காலத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கவனம் செலுத்தி, நிறுத்தப்பட்ட அந்தப் பேருந்தை மீண்டும் இயக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே 14,000 பேருந்துகள் இயக்கப்பட்டு வந்தன. இன்றைய தேதியில் 18,119 பேருந்துகள் இயங்குகின்றன. புதிய பேருந்துகள் நிறைய விடப்பட்டிருக்கின்றன என்பது சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் தெரியும். நிறைய பேருந்துகளை இயக்குமாறு அனைவரும் கோரி வருகிறீர்கள். அவர்கள் கேட்க, கேட்க, கட்சி மாச்சரியங்களில்லாமல், வித்தியாசம் இல்லாமல் பேருந்துகளை இயக்கிக் கொண்டிருக்கிறோம். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற வழித்தடத்தில் ஏற்கெனவே இயக்கப்பட்ட பேருந்து நிறுத்தப்பட்டிருந்தால், அதுகுறித்து அவர் எழுத்துமூலம் கடிதம் கொடுத்தால், உடனடியாக மாநகர் போக்குவரத்துக் கழக மேலாண்மை இயக்குநருடன் கலந்து பேசி, அந்தப் பேருந்தினை இயக்க நடவடிக்கை எடுக்கப்படும். தலைமைச் செயலகத்திற்குக்கூட, நொளம்பூர் பகுதியிலிருந்து 7M என்ற ஒரு பேருந்து காலை 8–30 மணிக்கும், மாலை திரும்பிச் செல்வதற்காக 6 மணிக்கு ஒரு பேருந்தும் இயக்கப்படுகிறது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் தளபதியார் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், பேருந்து வசதி சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பேருந்தை எந்தப் பகுதியிலிருந்து இயக்க வேண்டுமென்று கேட்கின்றாரோ, அதை எழுத்துபூர்வமாக எழுதிக் கொடுத்தால், மாநகர் போக்குவரத்துக் கழக மேலாண்மை இயக்குநரோடு கலந்து பேசி, அதை உடனடியாக இயக்குவதற்கு ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. ராஜு அவர்கள்.*

திரு. கே. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு கோடானுகோடி நன்றி. இத்தனை நாட்களாக பேச வாய்ப்புக் கோரி இன்றைக்குத்தான் பேச வாய்ப்பைக் கொடுத்திருக்கிறீர்கள்;*

[2022 மார்ச் 22

மிக, மிக நன்றி. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சரிடத்தில் மக்களின் கோரிக்கையை, பெண்களின் கோரிக்கையை வைக்கிறேன். பேருந்துகளில் பெண்களுக்கு இலவச பயணம் என்ற அறிவிப்பு வந்தவுடனே எல்லோரும் மிகவும் மகிழ்ச்சியடைந்தார்கள். இப்போது என்னவென்றால், குறிப்பிட்ட பேருந்துகளில்தான் அந்தப் பெண்கள் பயணம் செய்ய வேண்டும் என்று சொல்லும்போது அவர்களால் உரிய நேரத்தில் செல்வதற்கு முடியவில்லை. திரும்பவும் ஷேர் ஆட்டோவை பயன்படுத்துகிறார்கள்; மக்கள் கஷ்டப்படுகிறார்கள். பெண்களுடைய குரலாக நான் இதை இந்த நேரத்தில் ஒலிக்கிறேன். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர். . .

முற்பகல் 10–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், எந்த இடம் என்று குறிப்பிட்டுச் சொல்லுங்கள். பொத்தாம்பொதுவாகக் கேட்காதீர்கள். (குறுக்கீடு) துணைக் கேள்வி. குறிப்பிட்டு, ஒரு இடத்தினைக் குறித்துக் கேளுங்கள்.*

திரு. கே. ராஜூ: *பொதுவாக மதுரை மாநகரில் இயங்குகிற. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், மூலக் கேள்விக்கு சம்பந்தமில்லாமல் நீங்கள் கேட்டுக்கொண்டிருக்கிறீர்கள்.*

திரு. கே. ராஜூ: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* Please, Please. *அதாவது, மதுரை மாநகரப் போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்படும் எல்லா பேருந்துகளிலும் பெண்களுக்கு இலவசப் பயணம் என்று இருந்தால் பரவாயில்லை. குறிப்பிட்ட சில பேருந்துகளில்தான் இலவசமாகப் பயணம் செய்ய முடியுமென்று சொல்கிறார்கள். இதனால் அந்தப் பெண்களுக்கு மிகப் பெரிய தொந்தரவு, சில பேர்களால் குறிப்பிட்ட நேரத்திற்குச் செல்ல முடியவில்லை; அவர்கள் கஷ்டப்படுகிறார்கள். இதனை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், நகரப் பேருந்துகளில் இலவசமாகப் போகலாம் என்பது விதி. மிகத் தெளிவாக இருக்கிறது. அதன்படி நடக்கிறது. நீங்கள் அதில் ஏதாவது குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால் சொல்லுங்கள்.*

2022 மார்ச் 22]

திரு. கே. ராஜு: *மதுரை மாநகரில் குறிப்பிட்ட பேருந்துகளில் மட்டும், மகளிருக்கு இலவசம் என்று சொல்கிறார்கள், மற்ற பேருந்துகளில் ஏற்றுவது கிடையாது. எல்லா பேருந்துகளிலும் பெண்களை ஏற்றுகிறார்களா, அனுமதிக்கிறார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்தல் அறிக்கையிலே சொன்னதுபோன்று, மாநகரப் பேருந்துகளில் பெண்களுக்கு 40 சதவிகிதம் என்று வைத்தோம். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், இப்போது 61.82 சதவிகிதமாக உயர்ந்துவிட்டது. இந்த உள்ளாட்சித் தேர்தலில் பார்த்தீர்களென்றால், பெண்கள்தான் 100–க்கு 48 சதவிகிதத்திற்குமேல் இருக்கிறார்கள்; 90 சதவிகிதம் பேர் வாக்களித்தார்கள். ஆகவே, மகளிருக்கு இலவச பேருந்துப் பயணம் என்பது நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கனவுத் திட்டம். அந்தக் கனவுத் திட்டம் மிகவும் வெற்றிகரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இத்திட்டத்திற்கு முதலில் 1,350 கோடி ரூபாய் ஒதுக்கிய அரசு, இப்போது 1,510 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறது. ஆகவே, அரசுப் பேருந்துகளில் மகளிர் பயணம் என்பது மிகத் திருப்தியாக தமிழ்நாட்டில் நடந்து கொண்டிருக்கிறது. அப்படி ஏதாவது குற்றச்சாட்டுகள் அந்தப் பகுதியில் வந்தால் சொல்லுங்கள். எல்லா பேருந்துகளிலும் இலவசமாக விட்டால் அனைத்து பேருந்துகளிலும் ஏறிக்கொண்டிருப்பார்கள். பிறகு போக்குவரத்துக் கழகத்தை எப்படி நடத்துவது? ஏற்கெனவே 48,000 கோடி ரூபாய்* loss–*ல் போய்க்கொண்டிருக்கிறது. இதற்காக பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம்; அது உங்களுக்கும் தெரியும். ஆகவே, தேர்தல் அறிக்கையில் என்ன சொன்னோமோ, அது நடந்துகொண்டிருக்கிறது. அதனால் மக்கள் சந்தோஷமாக இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. ராஜு அவர்கள்தான் சந்தோஷமாக இல்லையென்று நான் நினைக்கிறேன்.*

[2022 மார்ச் 22

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 37, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. கார்த்திகேயன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

37—

மரக்கன்றுகள் நடுதல்

***3696—திரு. ப. கார்த்திகேயன்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் தொகுதி, சத்துவாச்சாரி, பெருமுகை, சலவன்பேட்டை மற்றும் ஓல்டு டவுன் மலைப் பகுதிகளில் மரக்கன்றுகள் நட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன், வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பசுமை தமிழகம்" என்ற திட்டத்தின்கீழ் மாபெரும் மரம் நடும் திட்டம், 2022–2023 ஆம் ஆண்டில் மாநிலம் முழுவதும் 2 கோடியே 50 இலட்சம் மரக்கன்றுகள் நடவு செய்யும் பணிகள் வனத் துறைமூலம் மேற்கொள்ளப்பட உள்ளன. இத்திட்டத்தின்கீழ் வேலூரில் சத்துவாச்சாரி, பெருமுகை, சலவன்பேட்டை, ஓல்டு டவுன் ஆகிய மலைப் பகுதிகளை உள்ளடக்கி, மண்ணின் தன்மை, தரம் ஆகியவற்றிற்கேற்ப சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து, 2022–2023–ல் 9 இலட்சத்து 4,200 மரக்கன்றுகள் நட்டு பராமரிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. கார்த்திகேயன் அவர்கள்.

திரு. ப. கார்த்திகேயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். வேலூர் மாநகரம், வேலூர் தொகுதி வெயிலூராக இருக்கிறது. அது பெருமுகை மலை, சத்துவாச்சாரி மலை, சைதாப்பேட்டை மலை, ஓல்டு டவுன் மலை, சலவன்பேட்டை மலை ஆகிய இடங்களில் மரம், செடிகளை நட்டு, வெயிலூரை நிழலூராக மாற்ற வேண்டுமென்பதுதான் என்னுடைய கேள்வி.